தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் உக	பார்த்திப—ஆவணி 1945—ஆகஸ்டு	மலர் ரு

கரந்தைப் புலவர் கல்லூரி வேண்டுகோள்!

செந்தமிழ் அன்புசால் சீர்த்தியார் அன்பரீர் !

உயர்மிகு தலைவர், செந்தமிழ்ப் புரவலர், தமிழவேள், இராவுசாகிபு. த. வே. உமாமகேசுவரம் பிள்ளை அவர்களின் தூய உள்ளத்தில் தோன்றி அவர்களது தமிழ்த் தொண்டென உருக்கொண்டு, அத் தொண்டின் ஒளியாக, அவர்களின், தமிழன்பின் குறியீடாக, உணர்ச்சியின் தோற்றமாக நின்று நிலவுவது எம் கரந்தைப் புலவர் கல்லூரி என்பதனைத் தாங்கள் நன்கறிவீர்கள்.

இக் கல்லூரி (College) நம் கரந்தைத் தமிழ்ச் சங்க வெள்ளி விழா நாளில், காலஞ்சென்ற திருப்பாதிரிப்புலியூர், **அருண்மொழி நாவலர்கோன், ஞானியாரடிகளால்** தொடங்கப்பெற்று நிகழ்ந்து வருகின்றது.

இக் கல்லூரியை இவண் நிறுவுதற்கும், இதனைச் சென்னைப் பல்கலைக் கழகத்தோடிணைத்து நிலைபெறச் செய்தற்கும் தமிழவேள் அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சியையும் உழைப்பையும் யாம் எங்ஙனம் எழுதிக்காட்ட வல்லேம்? **வீரத்திரு. A. T. பன்னீர்ச்செல்வம் அவர்கள்,** இந்திய அமைச்சருக்கு ஆய்வுரை தருவோராக அமர்த்தப் பெற்று, இலந்தன்மாநகர்க்குச் சென்றபோது, எம் கரந்தைப் புலவர் கல்லூரி அளித்த இயன்மொழிக்கு மறுமொழியாகக் கூறிய இயலுரைகளுட் சிலவற்றை இங்குத் தருகின்றேம்.

திரு. பன்னீர்ச்செல்வம் அவர்கள்: "நம் தஞ்சைமாநகரில் முன் ஒன்றாக நின்று நிலவிய தூயபேதுரு கல்லூரி (Saint Peters College) கல்லூரி நிலையினின்றும் தாழ்ந்து உயர்நிலைப்பள்ளி (High School) யாகிக் காட்சியளிக்கின்றது. நான்கு உயர்நிலைப் பள்ளிகளுள்ள நம் தஞ்சைமாநகரில், சோழமன்னர்களின் 'தலைநகராயிலங்கிய இத் தஞ்சையில் ஒரு கல்லூரி (College) யேனும் இல்லாமைக்கு யான் வருந்துகின்றேன். என் வருத்தமகல நம் கரந்தைத் தமிழ்ச் சங்கச்

சார்பில் தமிழவேள் த. வே. உமாமகேசுவரம்பிள்ளை யவர்கள் நம் தாய்மொழியாகிய தமிழ்மொழிக்கேனும் ஒரு கல்லூரியை (College) நாட்டியுள்ளார்கள்.

செல்வர்களும், அறிஞர்களும் செறிந்துள்ள இத் தஞ்சைக் கரந்தையிற் றோன்றிய இத் தமிழ்க் கல்லூரி (Tamil College) பொருள் முட்டுப் பாட்டால், தடையுறுமல் இதனைப் போற்றி வளர்த்து வரவேண்டுமென இம் மாநகர் மக்களை யான் மிக்க கனிவுடன் வேண்டுகிறேன். நம் தமிழவேள் அவர்களின் சீரிய தூண்டுதலாலேயே திருவையாற்று அரசர் கல்லூரியில் தமிழ்மொழிக்கு இடம் அமைக்கப்பட்டது. இச் சங்கத்தின் சார்பில் தொடங்கப்பெற்ற இக்கல்லூரி ஒரு தமிழ்ப் பல்கலைக் கழகமாகிச் சிறந்தோங்க வேண்டுமென இறைவனை வழுத்தி வணங்குகின்றேன்" எனக் கூறினுர்கள்.

மேலும் பேசும்பொழுது விரத்திரு. A. T. பன்னீர்ச்செல்வம் அவர்கள், தமிழவேளை நோக்கி, "தங்களைப்போன்ற மொழிப்பற்றும் நாட்டுப்பற்றுமுடைய பெரியோர் வேற்றுநாட்டில் வேற்று மொழியாளர்களிடத்தில் தோன்றி நின்று அந்நாட்டில் அவர்தம் தாய் மொழிக்கென ஒரு கல்லூரி நாட்டவேண்டுமென்னும் எண்ணங்கொண்டு இத்தகு பணியினை மேற்கொண்டிருப்பாராயின் அவரை அந்நாட்டினரும், மொழியினரும் பின்பற்றி ஆதரவளித்து, அவர் முயற்சி வெற்றி பெற்று வீறு கொள்ளப் பொருளிடம் முதலிய அளித்துப் போற்றிப் பேருவகை அடையாது ஒழிவரோ? தங்களின் தொண்டு முயற்சி முதலியவற்றிற்குத் தமிழர்கள் ஆதரவளித்து, தங்கள் தொண்டாலாம் பயனைப் பயன்படுத்தாது ஒழிகின்றனரே! என்னே தமிழர்தம் ஆகூழற்றதன்மை?" எனவும் இரங்கிக் கூறினுர்கள். இங்ஙனம் நமது பன்னீர்ச் செல்வம் அவர்கள் கூறிய பண்பார் உரைகளைத் தமிழர் பன்முறையும் படித்துணர்ந்து தெளிய வேண்டுமெனப் பணிவுடன் வேண்டுகின்றேம்.

நம் பன்னீர்ச் செல்வம் கூறினுற்போன்றே காலஞ்சென்ற ஞானியாரடிகள் தமிழவேள் அவர்களைக் குறித்துக் கூறுங்கால் இவர்கள் (த. வே. உமாமகேசுவரம் பிள்ளை) தந்தையாய், தாயாய், உடன்பிறந்தாராய், மக்களாய், இன்னுமற்றுமாய்த் தமிழையே கொண்டவர்கள். யாம் நாளும் முருகவேளை வழிபட்டபின் நம்நாட்டு நல்லோர் பலரை நெஞ்சத்தே உள்ளுவது வழக்கம். அங்ஙனம் உள்ளப்பெறும் பலருள் முதல்வராக உள்ளப்பெறும் சிறப்புடையவர் நம் தமிழவேள் த. வே. உமாமகேசுவரம் பிள்ளையவர்களே ஆவார்கள்." எனக் கூறினுர்கள். "பரவுறுடையே—பறவைகள் பரவுறுடையே" (பறவைகள் பரவுகின்றன; எங்ஙனம் பரவுகின்றன?)

"அன்னையை மீட்டன்றி வேறுசெய் யேனென
ஆவி யுடலும் பொருளும் அவட்கெனத்
தன்னல நீர்விட்டுத் தானங் கொடுத்தேயா
தரிக்கும் உமாமகேசன், தமிழார்வம் போலப்"

பறவைகள் பரவுகின்றன எனத் 'தமிழரசி குறவஞ்சி' நூலாசிரியர் தமிழவேளின் தமிழார்வத்தை உவமை முகத்தில் வைத்துப் போற்றியுள்ளார். இங்ஙனம் அரசியற் றலைவராலும், முற்றத் துறந்த முனிவ

ராலும், பெரும் புலவராலும் சிறப்பித்துப் பாராட்டிச் சிறப்புப் பெயரிட் டழைக்கப்பெற்றவரும், தமிழ்மொழிக்கே வாழ்ந்த தமிழ்ப் பெருமகனாரும் ஆகிய காலஞ்சென்ற எம் தமிழவேள் உமாமகேசு வரனார் அவர்கள் தூய உள்ளத்தோடு தமிழ்க்கலையை மீட்டளிப் பான் வேண்டி நாட்டிய இப்புலவர் கல்லூரி பல்கலைக் கழகத்தோடு இணைப்புற்ற பின், நான்கு உயர் வகுப்புக்களும் (Advanced I, II, III & Entrance) வித்துவான் முன்னிலை (Vidwan Preliminary) வித்து வான் முடி நிலை (Vidwan Final) வகுப்புக்களும் கல்லூரியின் சார்பில் தொடங்கப் பெற்று, எல்லா வகுப்புக்களும் செவ்வனே நிகழ்வுற்று வருகின்றன. இவ் வகுப்புக்களிலெல்லாம் தமிழ் நாட்டின் பலமாவட் டங்களினின்றும் வந்து சேர்ந்த எண்பத்துமூன்று (83) மாணவர்கள் சாதி சமய வேறுபாடு கருதாமல் இலவச உண்டி, உறையுள் அளிக்கப் பெற்று, கல்வி பயின்று வருகின்றனர். பல மாவட்டங்களினின்றும் வந்துற்ற மாணவர்கள் சாதி சமய வேறுபாடின்றி, ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் என ஒன்றி யுறையுங் காட்சி, காண்போர் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் பெற்றியில் கவினுர் காட்சியாய் இலங்குகின்றது. சுருங்கக்கூறின் இக் கல்லூரியாலாம் பயனைத் தமிழக முழுமையுமுள்ள மக்கள், சாதி சமய வேறுபாடின்றியும் மாவட்ட வேறுபாடின்றியுந் துய்க்கின்றனர் எனக்கூறலாம். இக் கல்லூரியின் நடைமுறைச் செலவிற்காக வேண்டித் திங்கள் ஒன் றிற்கு ஆயிரம் (1000) வெண்பொற் காசுகட்குமேலும் செலவழிக்கப் படுகின்றன. கல்லூரியிற் சிறந்த ஆசிரியர் எழுவர் அமர்த்தப் பெற்று மாணவர்கட்குக் கல்வி பயிற்றுவிக்கின்றனர். கல்லூரி தொடங்கிய நாட்டொட்டு இக் கல்லூரியினின்றும் பல்கலைக் கழகத் தேர்விற்குச் செல்கின்ற மாணவர்கள் நூற்றுக்கு நூறு பேரும் நூற்றுக்குத் தொண்ணூற்றைன்பதின்மரும் தேர்ச்சி பெற்றே வருகின்றனர். இங்ஙனம் சிறப்புறப் பணியாற்றி வரும், எம் கல்லூரி யைக் கண்காணித்தற் பொருட்டு, சென்னைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் (Madras University Vice Chancellar) பேரறிஞர், வீரத் திரு. A. இலக்குமணசாமி முதலியாரவர்கள் எழுந்தருளியபோது கல்லூரித் தாளாளர், முத்தமிழ்ப் புரவலர், இராவுசாகிபு, ஐ. குமாரசாமி பிள்ளை அவர் கள் சங்கத்திற்குற்ற பொருள் முட்டுப்பாட்டால் கரந்தைப் புலவர் கல்லூரிக்கெனத் தனிக்கட்டிடம் அமைக்க இயலவில்லை யெனவும், மாணவர்கட்கெனத் தனி யுணவுவிடுதியும் அமைக்க இயலவில்லை யெனவும், துணைவேந்தரைப் போன்ற சிறந்த செல்வாக்குள்ளவர்கள் தமிழ்மொழி வளர்ச்சிக்கெனத் தமிழ்ப் பெருமகனாரால் நாட்டப் பெற்ற இத்தமிழ்க் கல்லூரி இக்குறைபாடுகள் அகன்று வளர்ந் தோங்க, தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்த வேண்டுமெனவும் வேண்டிக்கொண்டார்கள். இங்ஙனம் ஐ. குமாரசாமி பிள்ளை யவர் கள் வேண்டிக்கொண்ட வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட துணை வேந்தரவர்கள் (Vice Chancellar) மறுமொழி கூறுங்கால் "பெருஞ் செல்வர்களும், பெருநிலக்கிழவர்களும், குறுநில மன்னர்களும் குழுமி வதியும் இத்தஞ்சை மாநாட்டில், நாட்டப்பெற்றுள்ள, தமிழ்ப் புலவர் கல்லூரியொன்று சிறப்புற வளர்ந்தோங்க ஈண்டுள்ளோர் பொருளுதவி புரிந்து புரக்காதிருக்கின்றனர் என்பதனைக் கேட்க யான் வியப்பும் வருத் தமும் அடைகின்றேன் ; எதிர் காலத்திலேனும் இச்செல்வர்களின் ஆதா

வைப் பெற்று, இக்கல்லூரி சிறந்தோங்க வேண்டுமென வேண்டுகின்றேன்." எனக் கூறினார்கள். பல்கலைக் கழகத் துணைவேந்தர் கூறிய பயனார் உரைகளை இத்தஞ்சைமா நாட்டில், பாங்குற வதியும் செல்வர்கள் உளங்கொண்டு, பலபொருளுதவி, பண்ணியற்றமிழ் வளர்க்க வேண்டுமெனப் பணிவுடன் வேண்டிக்கொள்ளுகின்றோம்.

உருதுமொழியின் சிறப்பினை உலகிற்கு அறிவிக்கும் முறையில் உசுமானியப் பல்கலைக் கழகம் உயர்தொண்டாற்றுகின்றது.

வங்காள மொழியின் வளத்தை வரைப்பெலாமுணரும் வண்ணம், கல்கத்தாப் பல்கலைக் கழகம் கவினுறத் தொண்டாற்றுகின்றது.

தெலுங்கு மொழியின் சீர்மையைத் திக்கெல்லாமுணர ஆந்திராப் பல்கலைக் கழகம் திருப்பணி புரிகின்றது. இங்ஙனமிருக்க, இத் தமிழ் நாட்டிலுள்ள பல்கலைக் கழகங்கள் நம் தமிழ்மொழிக்கு ஓதுக்கிடமே தருகின்றன. இக் குறைபாட்டைக் களைவான்வேண்டியும், தமிழ்மொழிக்கு முதலிடந் தருவான் வேண்டியும், தமிழ் மொழியையும், கலையையும் மேம்பாடடையச் செய்வான் வேண்டியுமே நம் கரந்தைப் புலவர் கல்லூரி நாட்டப்பெற்றதாகும். தமிழ் வளர்ச்சி, தமிழ் வளர்ச்சி என வாயாற் பேசின் தமிழ் தழைத்தோங்குமோ? தமிழ் நூல்களை முறையாக வரையறுத்து இலக்கண வழுவின்றிப் பயின்ற நன்மக்களை நாட்டிற் பெருக்கினாலன்றோ யாம் தமிழ் வளம் பேணியவர்களாவோம்; தமிழ் வளர்த்தவர்களாவோம். மொழி வரையறை யுணர்ந்த மூதறிஞர்கள் இல்லா நாடு ஒரு நாடாகுமோ? அக்காலத்திலேயே எழுத்தும் சொல்லும் வல்லாரைப் பெற்றும் பொருளதிகாரம் வல்லாரைப் பெறாமையால், பாண்டிய மன்னன் கவன்றனன் என அறிகின்றோமாகையால், முப்பிரிவிலும் நிரம்பிய மொழிநூலுணர்ச்சி மிகமிக இன்றியமையாத தென்பதனை அந் நிகழ்ச்சி நமக்கு அறிவிக்கின்றதன்றோ? நிகழ்காலத்தும் எதிர்காலத்தும் கொச்சைத் தமிழும் நச்சுத் தமிழும் நாட்டில் இடம்பெற்று நிலவி நற்றமிழறிவு மாய்ந்தொழியாமல் தமிழ்நலனோம்பும் காப்பாளர்களை இன்று எம் புலவர் கல்லூரி வளர்த்து வருகின்றது. இன்னும் எத்துணையோ காப்பாளர்களைத் தோற்றுவிக்கவும் சமைவாயுளது. எம் சங்கத்தினுள் நுழைந்தால் எம்மருங்கும் தமிழ் முழக்கு; எப் பேச்சும் தமிழ்ப் பேச்சு; எப்பாட்டும் தமிழ்ப்பாட்டு; எம் மூச்சும் தமிழ் மூச்சாக இயலுதலை அறிஞர்கள் கண்டுங் கேட்டும் இன்புறலாம். இங்ஙனம் எல்லாந் தமிழாய் இயலும் எம் கரந்தைப் புலவர் கல்லூரியிற் கல்வி பயில்கின்ற மாணவர்கட்கென உணவின் பொருட்டுச் செலவழியும் பொருள் ஒருமுகமாகக் கல்லூரிக்கு நிலைத்த வருவாயாய்க் கிடைக்கும் வண்ணம் செல்வர்கள் ஆவன செய்ய வேண்டுமென வேண்டுகின்றோம். "சோழ வளநாடு சோறுடைத்து" என ஆன்றோராற் சிறப்பித்துப் பேசப்பெற்ற இந்நாட்டில் அமைந்த கல்லூரியில் தாய்மொழியாகிய தமிழ் பயிலவரும் மாணவர்கட்கு 'உணவில்லை—உணவில்லை' எனயாம் உரைக்கின்றமையால் வறுமையுற்றுந் தமிழ் கற்க விருப்புடன் வரும் மாணவர்கள் தங்கள் உணவிற்கு உறுபொருள் செலவிட்டுப் பயிலுதற்குரிய ஆற்றலில்லாராய்

இங்குத் தங்கிப் படிக்க வழியின்றித் தங்கள் இல்லிற்குத் திரும்பி விடுகின்றனர்.

மிகுந்த மாணவர்களைக் கல்லூரியிற் சேர்த்தற்கு இட வசதியும் இல்லாத நிலையில் இருக்கின்றோம். யாண்டுதோறும் சென்னை மண்டிலக் கல்வித்துறைத் தலைவரது (Director of Public Instruction) ஆணையின் வண்ணம் நமது கல்லூரியைக் கண்காணிக்கும் வடமொழிக் கல்விக் கழக ஆய்வாளரும் பிற ஆய்வாளரும், கல்லூரியைப் பற்றி நல்ல கருத்தே வெளியிட்டுள்ளனர். அவ்வாய்வாளருரை எமக்கு அளவிலா மகிழ்ச்சியைத் தருகின்றது. இஃதன்றி அரசியலாரும் நமது கல்லூரிக்கு நிலைத்த ஒப்புமை (Permanent Recognition) தந்து ஊக்கும் இந்நிலையில் ஆய்வாளர் அடிக்கடிச் சுட்டிக் காட்டும் குறைகளாகிய, கல்லூரிக்கேற்ற கட்டிடமின்மை, ஆசிரியர் ஊதியக்குறைவு, ஆகிய இவைகள் இனியும் ஆய்வாளராற் கூறப்பெறுமல் ஆவன செய்தல் தமிழன்பர்களின் இன்றியமையாக் கடமையாகும் என்பதனை யறிவிக்கின்றோம். புலவர் கல்லூரிக்குரிய இடம் பொருள் ஏவல் முதலிய எல்லாம் செம்மையுற நிறைவுபெற இந்நாட்டுச் செல்வர்கள் ஏற்பன செய்து முற்கூறியாங்குச் சோழ வள நாடு சோறு முடைத்துத் தமிழ்வளம் பேணுதலைச் சொத்தாகவு முடைத்து, எனப் பிறர் போற்றுமாறு செயலாற்றிப் பொன்னளித்து, எம் கல்லூரியைப் போற்ற வேண்டுகின்றோம். முனிவரும் மன்னரும் முன்னுவ பொன்னுல் முடியுமன்றே? இக்கல்லூரியை நிலைபெறச் செய்தற்குத் தமிழ் நாட்டினரேயன்றி, நாடு சாதி சமய வேறுபாடின்றி எல்லோர்க்கும் பயன்றந்து பொதுவில் நிகழ்வுறாஉங் கல்லூரியாயிருத்தலின், இதன் ஆக்கங் கருதிப் பொருளுதவிபுரிய வேண்டுமெனப் பிறநாட்டுச் செல்வர்களையும் பெரிதும் வேண்டிக்கொள்ளுகின்றோம். 'நிதி மிகுந்தவர் பொற்குவை' தந்தும், 'நிதிகுறைந்தவர் காசுகள்' தந்தும், இவையுமிலாதவர் இன்சொல் இயம்பியும், இனியநற் றொண்டர்கள் இன்னுழைப் பீந்தும், ஆதரித்து இக்கல்லூரியைப் போற்றுமுகத்தான் தமிழ் மொழியைப் போற்றி யருள வேண்டுகின்றோம். 'வையமீன்ற தொன் மக்கள் உளத்தினைக் கையினுல் உரை காலம் இரிந்திடப் பைய நாவை யசைத்த பழந்தமிழ் ஐயை'யைப் பண்புறப் போற்றும் எம் கல்லூரி பல நலனும் பெற்றுப் பாங்குறச் சிறந்தோங்க வேண்டித் தமிழன்னையை வணங்கி வாழ்த்துகின்றோம்! வாழ்க தமிழ் மொழி! வாழியர் தமிழர்!!

முப்பெரு மணிகளும் முதன்மைபெற் றோங்குக !

தமிழகஞ் செய்த தவப்பயனாற் றோன்றி, அறிவாற்றலிற் சிறப்புற்றோங்கி உலகினரால் நன்கு மதிக்கப்பெற்றுத் தமிழர் இனமே தலைநிமிர்ந்து பெருமிதங்கொள்ளும் வண்ணம் சிறப்பளித்து மிளிரும் மும்மணிகள், **பேரறிஞர். வீரத்திரு. A. இராமசாமி முதலியாரும், பேரறிஞர், வீரத்திரு. A. இலக்குமணசாமி முதலியாரும், வீரத்திரு. R. K. சண்முகஞ் செட்டியாரு மாவார்கள்.** இம்மூவருள் வீரத்திரு. A. இராமசாமி முதலியாரவர்கள் சான்பிரான்ஸிஸ்கோவில் கூடிய உலக அமைதி மாநாட்டிற்கு இந்திய மக்களின் சார்பாகச் சென்று அம்மாநாட்டின் சார்பாக நிகழ்ந்த உலகப் பொருளாதார மாநாட்டிற்குத் தலைமைதாங்கிப் பிற நாட்டினரெல்லாம் போற்றிக் கையொலி செய்யுமுறையில் சொற்பொழிவாற்றிச் சிறப்புறப் பணியாற்றித் திகழ்ந்தார்கள். இவர்களின் அறிவின் ஒட்பத்தையும், வன்மையையும், செயலாற்றுந் திறலையுங் கண்டுங் கேட்டும் மகிழ்ந்து ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகம் (Oxford University) இவரின், தொண்டினைப் பாராட்டிச் சிறப்பிக்குமுறையில் '**பேரறிஞர்**' எனும் புகழ்சால் பட்டத்தை வழங்கியுள்ளது. மற்றும் பல பட்டங்களையும், பதவிகளையும் பெற்று முதன்மையுற்று, வாழியர் **பேரறிஞர் வீரத்திரு. A. இராமசாமி முதலியார்** எனத் தமிழன்னையை வணங்கி வாழ்த்துகின்றோம்.

சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தராயிருந்து சிறப்புறப் பணியாற்றிச் சிறந்த பேரறிஞர் **வீரத்திரு. A. இலக்குமணசாமி முதலியாரவர்கள்** போட்டியின்றி மீண்டும் சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தராக நியமிக்கப் பெற்றுள்ளார்கள். அறிவாற்றலில், செயலாற்று முறையில் இவர்கட்கு இவர்களே உவமையாக உள்ளார்களாதலின் இவர்களின் நியமனத்தால் சென்னைப் பல்கலைக் கழகம் மேலும் சிறந்தோங்கும் ஒரு வாய்ப்பினைத் தேடிக் கொண்டதெனக் கூறுகின்றோம். சிறப்புறு பெருமகனாராய சென்னைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் பேரறிஞர். **வீரத்திரு. A. இலக்குமணசாமி முதலியாரவர்கள்** மேலும் பெரும் பதவிகள் பெற்று முதன்மையுற்றுயர வேண்டுமெனத் தமிழன்னையை வணங்கி வாழ்த்துகின்றோம்.

இந்திய மன்னரவைத் தலைவர்க்கு நீதி ஆய்வுரை தருவோராகத் **திருவாளர். வீரத்திரு. R. K. சண்முகஞ் செட்டியாரவர்கள்** நியமிக்கப் பெற்றமை கேட்டு மிக மிக மகிழ்கின்றோம். முன்னரேயே கொச்சி மாநாட்டின் திவானாகவும், இந்தியச் சட்ட மன்றத் தலைவராகவும், பல எல்லா உலக மாநாட்டில் இந்தியாவின் சார்பில் சென்று செயலாற்றும் சீரியோராகவும் இலங்கிய இயலறிஞர் சண்முகஞ் செட்டியாரைக் காட்டினும் அப்பதவிக்குத் தகுதி யுடையோர் இந்திய நிலப் பரப்பிலேயே பிறர் இலராதலின் இவரே அப்பதவிக்குத் தகுதியும், பொருத்தமுமானவர் எனக்கூறி இவரை நியமித்த மன்ன ரவைத்தலைவரையும், அரசியலாரையும் யாம் இனிதாகப் பாராட்டுகின்றோம். எம் கரந்தைப் புலவர் கல்லூரியின் வளர்ச்சியில் நாட்டங் கொண்ட செட்டியாரவர்கள் மேலும், மேலும் எழிலுறு பதவிகள் பெற்று, முதன்மையுற்று, இனிதுற வாழவேண்டித் தமிழன்னையை வணங்கி வாழியர் R. K. சண்முகஞ் செட்டியாரென வாழ்த்துகின்றோம்.

இங்ஙனம், பொழிலாசிரியர்.

கரந்தைத் தமிழ்ச்சங்கமும், கவி தாகூரும்.

திரு. N. இலட்சுமண முதலியார் அவர்கள்,
'கூட்டுறவு' ஆசிரியர், கோவை.

மகாகவி ரவீந்திரநாத தாகூரை வங்காளத்தில் நான் தரிசித்து இற்றைக்குச் சுமார் கால் நூற்றுண்டாகிறது. அப்போது அவருடைய ஐம்பதாவது பிறந்த தினத்தை வங்காளக் கலாபிவிருத்திச் சங்கத்தார் சிறப்பாய்க் கொண்டாடினுர்கள். அச் சமயத்திற்குப் பிறகே அவரது நூல்கள் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டன.

1919-லும் 1922-லும் சில வாரங்கள் தென்னுட்டில் அவருடன் சுற்றுப்பிரயாணம் செய்தபோது ஒரு புனிதமான வேலையை என்னிடம் தாகூர் ஒப்படைத்தார். தமிழ்க்கலை வளர்ச்சித் துறையில் சேவை செய்கிறவர்களைத் தாம் நேரில் சந்திக்கவேண்டு மென்கிற அவரது விருப்பப்படி, சிலருடைய பெயர் விலாசங்கள் அவரிடம் கொடுத்ததோடு, சில தமிழ்ப் பெரியோர்களையும் அறிமுகம் செய்து வைக்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. ஆனுல் நானுவது வேறு யாராவது தமிழ் மொழியின்மேலும், தமிழர்மேலும் தாகூருக்கு அபிமானம் ஊட்டினேும் என்று சொன்னுல் அது பொய்க் கூற்ருகும்.

இந்திய சரித்திர ஆராய்ச்சியில் தாகூருக்கு விசேஷ பற்று உண்டு. திராவிட நாகரிகத்தின் தனிச்சிறப்பை அவர் பல ஆண்டுகளுக்கு முன்பே கண்டு கொண்டார். இத்துறையில் ஆராய்ச்சி செய்கிறவர்களை அவர் எப்போதுமே பாராட்டியிருக்கிருர். ஆங்கில மொழி பெயர்ப்புக்களில் கிடைக்கக்கூடிய பழந்தமிழ் நூல்கள் எல்லாவற்றையும் தாமே படித்துப் பார்த்துவிட்டுச் சாந்திநிகேதனப் புத்தகசாலைக்கு அவர் அனுப்பி விடுவது வழக்கம்.

தேவாரம், திருவாசகம் ஆகியவைகளைப் பண்ணேடு பாடக் கேட்டு மயிலாப்பூரில் அவர் ஆனந்தப்பட்டார். அவர் செய்துள்ள கீதாஞ்சலி வங்கமொழியில் பாடக்கேட்டால் தேவாரம் திருவாசகம் போல இருக்கும் என்று ஒருவர் முகமனுகக் கூறிய வுரைகளை அவர் ஏற்றுக் கொள்ளவே இல்லை. அம்மாதிரி சமப்படுத்திப் பேசுவது தமக்குச் சிறிதும் விருப்பமில்லை என்று கண்டிப்பாய்ப் பதில் சொன்னுர். இந்தச் சம்பவம் 1919-ல் நடைபெற்றது.

8—10—1922-ல் திருமயிலாப்பூரில் திருவள்ளுவர் திருக்குறள் கழகத்தின் தலைவரையும் அங்கத்தினர்களையும் தாகூர் அன்புடன் சந்தித்தார். தாகூர் சட்ட விரிவுரையாளர். திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் மகாகவியை உபசரித்துப் பேசினுர்கள். (இதற்குச் சில தினங்கள் முந்தியோ பிந்தியோ என்பது என் ஞாபகத்துக்கு வரவில்லை.) திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் ஆண்டு விழாவில் தலைமை வகித்தார். "விஸ்வபாரதி" யின் ஆதரவில் தமிழ் ஆராய்ச்சி நடத்த வேண்டுமென்கிற பேரவா தாகூருக்கு இருப்பதைக் கண்டு கரந்தைத் தமிழ்ச் சங்கத்தார் மகிழ்ச்சியடைவதாகத் தாகூருக்கு ஒரு தந்தி கிடைத்தது. இதனுல் அவருக்கு உண்டான ஆனந்தத்தை என்னுல் வர்ணிக்க முடியவில்லை. இந்தத் தந்தியின் உட்கருத்தைக் குறித்து, தாகூர் அப்போது அடிக்கடி

பேசினார்கள். தகுந்த பாண்டித்யம் உள்ளவர்கள் கிடைத்தால் அவர்களை உடனே சாந்திநிகேதனத்திற்குக் "கடத்தி"ச் செல்லவும் (Kidnap) தாம் தயாராயிருப்பதாகச் சொல்லி மகிழ்ச்சி பூத்தார்.

அவ்வண்ணமே திருவனந்தபுரத்திற்குச் சென்று "கோட்" வாத்தியம் திரு. குட்டன் பிள்ளையைச் சாந்திநிகேதனுக்கு அழைத்துக் கொண்டார். அதுவரை அவர் "கோட்" வாத்தியம் கேட்டதில்லை. தமிழ் இசைச் செல்வர் திரு. இலக்குமணபிள்ளை அவர்களுடைய வீணைக்கச்சேரி கேட்டு, தாகூர் ஆனந்தப்பட்டார். அவரை முன்னுடியே சந்திக்காதது குறித்து வருத்தமடைந்தார். இலக்குமணப் பிள்ளை இவ்வளவு பெரியவர் என்பதை உணர்ந்து மகாகவி ஆச்சரியப்பட்டார். தமிழ்ப் பேரறிஞர். S. சோமசுந்தர பாரதியார் திருநெல்வேலியில் தாகூரைச் சந்தித்துப் பேசினார்கள். அவரைப்போன்றவர்கள் விஸ்வபாரதிக்கு வரக்கூடுமானால் வெகுநன்றாயிருக்கும் என்று தாகூர் சொன்னார். தஞ்சாவூர் என்று சொன்னமாத்திரத்திலே ஆப்ரகாம் பண்டிதர் இயற்றிய பெரிய ஆங்கிலப் புத்தகம் அவர் ஞாபகத்துக்கு வருகிறது. ஆனால் தமிழ்ப் பெயர்களை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுவது தாகூருக்குக் கொஞ்சம் கஷ்டமாயிருக்கிறது. சாந்திநிகேதனத்தை நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக அவர் வளர்த்துவந்ததுபோலவே, இராவு சாகிபு. திரு. உமாமகேசுவரம் பிள்ளை அவர்களும் கரந்தைத் தமிழ்ச்சங்கத்தையும், பள்ளிக்கூடத்தையும் கல்லூரியையும் வளர்த்து வந்தார்கள். இவர்களது நோக்கம் இனிது நிறைவெய்தி வடநாட்டிற் சாந்திநிகேதனம் போல், தென்னாட்டில் கரந்தைத் தமிழ்ச் சங்கமும் சிறந்து புகழ்கொள்ள இறைவனை வழுத்தி வணங்குகின்றேன்.

வருந்துகின்றேம்.

சங்கீத கலாநிதி யெனும் சிறப்புப்பெயரிட்டழைக்கப் பெற்றோரும், சென்னை அண்ணாமலைப் பல்கலைக் கழகங்களின் இசைப் பகுதிக்குத் தலைமை தாங்கிச் சிறப்புறப் பணியாற்றிப் புகழ் கொண்டவருமாகிய இசைப் பேராசிரியர் K. பொன்னையா பிள்ளையவர்கள் தஞ்சையிலுள்ள தமதில்லத்தில் ஐம்பத் தொன்பதாம் அகவையில் துடுமென மாரடைப்பால் உயிர்நீத்து இறைவன் திருவடி நீழலடைந்தார்கள் என்பதனைக் கேட்டு மிகமிக வருந்துகின்றேம். தஞ்சை மாவட்டத் தமிழிசைச் சங்கச் சார்பில் தொடங்கப்பெற்ற இசைக் கல்லூரிக்குத் தலைவராயமைந்து ஆவனசெய்ய முற்பட்டார்கள், வெண்ணெயுருண்டு வரும் பொழுது தாழி உடைந்தாற்போன்று இக் கல்லூரி நன்கு நிலை பெறுவதற்கான பணிகள் நிகழுற இருக்கும் அமையத்தில் இவர்கள் மறைந்துவிட்டார்கள். இவர்களின் மறைவு கரந்தை இசைக் கல்லூரிக்கும், இசையுலகிற்கும், ஈடு செய்ய முடியாத ஒரு பேரிழப்பாக முடிந்தது. இசைத்தமிழ் வளர்ச்சிக்குத் தொண்டியற்றிய இப்பெரியாரின் இன்னுயிர் இறைவன்திருவடி நீழலில் இன்புற்றுத் திளைக்க இறைவனை வழுத்தி வணங்குகின்றேம்.

பொழிலாசிரியர்.

தமிழ் வேந்தர்.

வித்துவான். ஔவை. சு. துரைசாமி பிள்ளை அவர்கள்.

(முற்றொடர்ச்சி : துணர் 21, மலர் 4, பக்கம் 88)

அவருள் காத்தியாயனர் என்ற சிறப்புப்பெயர் பெற்ற வரருசி என்பவர், சேர சோழ பாண்டியர் என்ற பெயர்கட்கு அமைதி காட்டுவது குறித்து, பாணினியரின் அஷ்டத்யாயின் குறைபாட்டை நிறைவு செய்வார் போலத்தாம் எழுதப் புகுந்த வார்த்திக வுரையில் இலக்கண விதிகள் புதியவாக அமைக்கலாயினர். அவருக்குப் பின் வந்த பாடிய காரர் என்ற சிறப்புப் பெயருடைய பதஞ்சலியாரும், வரருசியையே பின் பற்றிச் செல்லுகின்றார். இவர்கள் எழுதியுள்ளவற்றை நோக்கின், வரருசியும் பதஞ்சலியும் சேர சோழரென்ற பெயர்கள் அவ்வந் நாடுகளின் பெயரடியாக வந்தவை யென்றும், பாண்டிய ரென்பது, பாண்டு என்னும் நாட்டிற்கும், ஓர் அரசகுடும்பத்திற்கும் உரிய பெயரின் அடியாக வந்ததென்றும் கருதுகின்றனர் என்பது தெளிவாக விளங்குகின்றது. தென்னாட்டிலிருந்த அரசகுடும்பம் யாதும் பாண்டு என்ற பெயருடன் இருந்ததில்லை; பாண்டியர் என்ற பெயரையுடைய குடி யொன்றே பண்டைநாளில் இருந்தமையின், அவ்விலக்கண வுரையாசிரியர் கூறுவது பொருந்தாது எனத் தமிழர் வரலாறு என்ற நூல் கூறுகின்றது.

இனி, K. A. நீலகண்ட சாஸ்திரியார் அவர்கள் பாண்டியர் என்ற சொல்லைப் பற்றிக் கூறுகையில், வடமொழியிலக்கண ஆசிரியர்கள் காட்டிய பொருளை மேற்கொண்டு மாக்ஸ் முல்லர், பந்தர்க்கார் முதலியோர் கூறியன தெளிவுடையவாகா, காத்தியாயனர் இலக்கணப்படி பாண்டியர் என்ற சொல்லின் முதனிலை பாண்டு என்பதே யாதல் வேண்டும். தமிழ்நாட்டுப் பாண்டியர் நாடு பண்டையில் பாண்டி யென்பதாம்; வடமொழியாளர் காட்டும் பாண்டியர் ஒருகால் மத்திய தேசத்துப் பாண்டு எனப் பெயர்பெற்ற அரச குடும்பத்தவராதல் வேண்டுமேயன்றித் தமிழ்நாட்டுப் பாண்டியராகார் என்று எடுத்து மொழிந்து, கௌடில்யரது பொருணூல் கூறும் (சேர சோழ) பாண்டியரென்பது தமிழ்நாட்டுப் பாண்டியரையே குறிக்கும் என்று கூறுகின்றார். இதனோடு, மகாவம்சம் கூறும் கதைகளும், பிறவும் ஆராய்ந்து சரித்திர ஆராய்ச்சிக்குப் பயன் தருவனவல்லவென விலக்கப்படுகின்றன.

இனி, கால்டுவெல் என்பார் இது குறித்துச் சில கூறுகின்றார். "சிங்களவர்க்குள் பாண்டியரைப் பற்றிக் கூறும் கதையொன்று வழங்குகிறது. இலங்கை யரசன் விசய னென்பான் பாண்டிய மன்னனது மகளொருத்தியை மணந்து, அவள் வயிற்றிற் பிறந்த மகனுக்குப் பாண்டிய வம்ச தேவன் என்ற பெயரிட்டழைத்தான். பாண்டவருள் ஒருவனான அருச்சுனன் என்பானும் பாண்டிய வேந்தன் மகளொருத்தியை மணந்தான். இக்கதைகளில் போதிய உண்மையிருப்பதாகத் தெரியவில்லை; மற்று, பிளினி, பெரிப்ளூஸ் காலத்தில்

கரையில் ஒரு பகுதி பாண்டிய ராட்சிக்குள் இருந்த தென்பது உண்மையே. அது பாண்டிய ராட்சியின் வன்மையையும் பரப்பையும் மெய்ப்பிக்கிறது. அகஸ்டஸ் என்னும் அயோனியா நாட்டு அரசர்க்குத் தூதனுப்பிய இந்திய மன்னன் தமிழ்நாட்டுப் பாண்டியனுகுமே யன்றிப் போரஸ் என்பவனல்லன் என்று துணிகின்றேன். இஃது ஏற்கப்படுமாயின், பாண்டியர்கட்கும் மேனுட்டு மக்கட்கும் உளதாயிருந்த தொடர்பு எத்துணைச் சீரிய நிலையில் விளங்கிற்றென்பது இனிது அறியப்படும். அலெக்சாந்தருக்கும் வடநாட்டு இந்திய மன்னருக்கும் இருந்த அரசியல் தொடர்பு அறுபட்டபிறகு, மேனுட்டவர் தொடர்பின் பயப்பாட்டினை நன்றெனவுணர்ந்த இந்திய மன்னர்களுள் தமிழ்நாட்டுப் பாண்டி மன்னரே முதல்வராவர்."

இவ்வாறு பாண்டியர்களின் பொதுவியல்பைக் கூறிச் செல்லும் இவர் பாண்டியர் என்னுஞ் சொல்லின் பிறப்பைப்பற்றி வடமொழியாளர் கூறுவதையே மேற்கொண்டு அதற்குத் துணையாக மகாவம்சக் கதை, பாரதக்கதை, மகஸ்தனீஸ் என்பவர் கேள்வியுற்றெழுதிவைத்த கதை ஆகிய இவற்றை எடுத்துக்காட்டுகின்றார். பின்னர் பிளினி, "பாண்டே" "பாண்டியன்" என்று வழங்கியவற்றை எடுத்து மொழிந்து பாண்டியரின் தொன்மைக்கு ஆக்கம் தருகின்றார்.

இனி, சோழரைப்பற்றிக் கூறத்தொடங்கி, சோழரென்னும் இச் சொற்கு முதனிலை தெரிந்திலது; அசோக மன்னரின் கல்வெட்டுக்களில் சோடர் என்றும், தெலுங்கில் சோளர் என்றும், தமிழில் சோழர் என்றும் இச்சொல் வழங்கி வருகிறது; தாலமியின் குறிப்புக்களில் காணப்படும் சோரை யென்பதும் சோழரையேயாகும். ஹ்யூன்ஸாங் கூறும் சோழியநாடு இஃதென விளங்கவில்லை. சோழநாடு தானே என்று கோடற்கும் கூடவில்லை, என்று மொழிந்து விட்டு, சோழ நாட்டின் பரப்பையும் சிறப்பையும் கூறிச் செல்கின்றார்.

பின்னர் அவர் சேரர்களைப்பற்றி எழுதத் தொடங்கித் தமிழ் நாட்டில் சேரர் எனப்படுவோர் வடநாட்டில் கேரளர் என்றே வழங்கப்பட்டனரென்றும், சேலம், கோயம்புத்தூர், மைசூரின் ஒரு பகுதியாகிய இவை சேரநாடு என்ற பெயர்பெற்றன என்றும், இங்கே கூறிய கொங்கு நாட்டு மன்னரையே சேரமன்னரெனக்கொண்டு, ஆசிரியர் டவுசன் (Dowson), டாக்டர் எக்லிங்கு (Eggeling) முதலியோர் ஆராய்ச்சி நிகழ்த்துவாராயினர் என்றும், சேர நாட்டின் பகுதியாகிய கொங்கு, குடகு என்பவற்றையும், கேரளம் என்பதன் மூதனிலை கேரம் என்பதையும் காட்டி, கேரம் என்பதற்கு மலையாளத்தில் தென்னைமரம் என்று பொருள் என்றும் கூறிச்செல்கின்றார். இவ்வாராய்ச்சி சேரர் என்ற சொற்பொருளையோ சேரவேந்தர் சிறப்பையோ அறிதற்குத்துணை செய்யாமையின், இதனை இம்மட்டில் நிறுத்திக் கொள்கின்றும். தமிழ்நாட்டுச் சேரர் வடநாட்டிற் கேரளர் என்றும், கேரள புத்திரர் என்றும் வழங்கப்பட்டனர் என்பது குறிக் கொள்ளவேண்டிய தொன்றும்.

இனி, இம்மூவேந்தரையும் பற்றியதொரு செய்தியைக் கால்டுவெல் ஆசிரியர் கூறுகின்றார். அஃதாவது, " தாமிரபரணி யாற்றங்கரையில் கொற்கை யென்பதொரு நகர் உண்டு; பண்டைத் தமிழ் நாகரிகம்

பிறந்து வளர்ந்து சிறந்தவிடம் அதுவே; அந்நகரில் இருந்த அரசர்க்கு மக்கள் மூவர் இருந்தனர். அவர் சேரர், சோழர், பாண்டியரென்போராவர். அவர்களுக்குப் பிரிவு உண்டாகியபோது சேரனும் சோழனும் முறையே மேற்கினும் வடக்கினும் சென்று தம் பெயரால் இரண்டு அரசியலை நிறுவினர்; பாண்டியன் இடம் பெயரவில்லை; அன்று முதல் தமிழ்நாடு முத்தமிழ் நாடாய் முடிவேந்தரான இம் மூவரால் காக்கப்பட்டு வந்தது." என்பது. இதனின் வேருகப் பல புராணங்கள் கூறுவதையும் அரிவமிசம் முதலிய நூல்கள் கூறுவதையும் குறித்துச் செல்கின்றார். இடையே அரிவமிசக் கதையைக்கூறி, அதன்கண் வரும் கோலர்கள் இன்னாரென்று துணிவதற்குச் சான்றுகள் இல்லை; இருந்தால் அவர்களும் திராவிடரேயாதல் வேண்டுமென்பார்.

சமணமும் பௌத்தமும் வடநாட்டிலிருந்து தமிழ்நாடு புகுந்தபோது தமிழ வேந்தர் மூவரும் சீரிய நிலையில் இருந்து வந்தனர். சேரநாட்டிலும் சோழநாட்டிலும் இப்போதும் சமண பௌத்தப் பள்ளிகளும் கற்குகைகளும் காணப்படுகின்றன. அசோகர் காலத்துக் கல்வெட்டுக்களிலும் மோரியராட்சிக் குறிப்பிலும் தமிழ்நாடு பிறராட்சிக்குட்படாது தனித்திருந்து, கோலோச்சிவந்தமை புலனுகின்றது. தமிழ் வேந்தர் வடநாட்டு வேந்தர்க்குப் பெரும்பொருள் நல்கியதாகக் கூறப்படும் செய்திகள் தமிழ் வேந்தரது செல்வ மிகுதியை யுணர்த்துவனவே தவிர, தோல்விக்குறியாகச் செலுத்திய திறைகளல்லவெனத் தெளிய வுணரவேண்டும்.

இதுகாறும் வேற்று நாட்டு மக்கள் நம் தமிழ் வேந்தரைப்பற்றிக் கூறியவற்றைப் பார்த்தோம்; தமிழ் நாட்டவர் இத்தமிழ் வேந்தரைப் பற்றி எவ்வகைக் கருத்துடையவரென்பதை அறியலாம். இதைக் குறித்துத் தமிழர் வரலாறு எழுதிய ஆசிரியர் கூறுவது மிக்க பொருத்தமாக இருத்தலின் அதனை மட்டில் சுருங்க உரைக்கின்றோம். தமிழ் நாட்டு மூவேந்தரும் தமிழகத்துத் தொன்றுதொட்டு வந்த பழங்குடிப் பெருமக்களாவர். பிற்காலத்தில் பிராமணீயம் புகுந்து தூண்டிய தன் பயனாக ஆரிய மன்னர்களைப்போல இவர்களும் குலமுறை வகுத்துக் கொள்வாராயினர். ஆதலால், சோழர் சூரிய குலமென்றும், பாண்டியர் சந்திர குலமென்றும், சேரர் அக்கினி குலமென்றும் கூறப்படலாயினர். ஆயினும் இவ்வேந்தர் தமிழ் வேந்தர் என்பது மட்டில் மாருதே நிலவுவதாயிற்று. எனினும், இவர்கள் தமிழர்களே என்பதும், இவர்பெயர் தமிழ்ப்பெயரே என்பதும் அழியா உண்மைகளாகும்.

இவருள் சோழரென்பார் காவிரி பாயும் வளநாட்டு வேளாளராவார். அவர் தமக்கு அடையாளமாக ஆத்திமாலை சூடினர். பாண்டியர் கடற்கரை நாட்டுப் பரதராவார். அதனல் இவர் தென் பரதவர் என்றும் கூறப்படுவர். இவர் நாட்டுச் சிறப்புடைய மரம் வேம்பு; அதனல் இவர் வேம்பின் பூந்தாரைத் தமக்கு அடையாளமாகவுடையர்; மீன்பிடித்தலும் இவர்க்குத் தொழிலாதலின், மீனக் கொடி யுடையராயினர். காடு கொன்று நாடாக்கி, குளந்தொட்டு வளம்பெருக்கும் தொழின்மையால் சோழர் புலிக்கொடி யுடையராயி

னர்; நாளும் வில்வேலேந்தி வேட்டம் செய்தலையே தொழிலாக வுடையராதலால், சேரர் விற்கொடியுடையராயினர்.

இவ்வுண்மை காணுது, இவர்கட்குப் பிறநாட்டுத் தோற்றத் தொடர்பு கூறலும், அதற்கு ஏற்பத் தாம்தாம் நினைந்தவாறு புனைந்து கூறலும் தீய ஆராய்ச்சியின் வழுவுரையாகும் என்று தமிழர் வரலாறுடையார் தம் செவ்விய முடிபாகத் தெரிவிக்கின்ருர்.

சேரர் மலைநாட்டுக் குறவர்களாவர். அஃதாவது குறிஞ்சி வேந்தர் என்பது. காவிரி தோன்றும் மலையகமும், மேலைக் கடற் கரைப் பகுதியும் அவரது நிலமாகும். ஆங்கே சிறப்புற நிற்கும் மரம் பனையாகலின் அவர் தமக்கு அடையாளமாகப் பனந்தோடே கொள்வாராயினர்.

தமிழகத்தே மேனுட்டு மக்களால் தமிழர் என்றும் தமிழகம் என்றும் வழங்குதற்குக் காரணமாயிருந்தவர் சேரநாட்டு மக்களே யாவர். பெரிபுளூஸ், தாலமி முதலிய யவனஆசிரியர்களின் எழுத்துக்களில் டமிரைக் என்று காணப்படுவதும், அதன்கண் குறிக்கப்படும் ஊர்களும் யாறுகளும் மக்களும் சேரநாட்டவே யாதலால், சேர நாடே பிற நாட்டவர் இனிதறிதற்கு முதன்மை வாய்ந்திருந்தமை விளங்கும். அக்காலத்து, இந் நாட்டவருள் கடலிற் கலஞ் செலுத்தும் தலைமைப் பண்பு இவர்பாலே கிடந்தது. மலையமான் திருமுடிக் காரியைப் பாடிய மாறோகத்து நப்பசலையார் என்ற புலவர் பெருமாட்டியின் புறப்பாட்டில் "சினமிகுதானை வானவன் குடகடல், பொலந்தரு நாவாய் ஓட்டிய அவ்வழிப், பிறகலம் செல்கலாதனையேம்" (புறம் 126) எனக் காட்டும் உவமையால் சேரரது கலஞ் செலுத்தும் தலைமை உரிமை நெடுங்காலத்து முன்பே வீறுற்றிருந்தமை மேம்பட்டுத் தோன்றுகிறது. அன்றியும் நம் நாட்டிலிருந்து மேனுடுகளுக்கு ஏற்றுமதியான உயர் பொருளும், மணியும் மயிலும் பட்டாடையும் கம்பளங்களும் இச் சேரநாட்டின் வழியாகவே செலவு பெற்றன. அதனுல் பண்டையில் காலினும் கலத்தினும் வாணிபம் நடைபெறுதற்கு ஊக்கமும் ஆதரவும் உழைப்பும் இந் நாட்டில் மிக்கிருந்தன வென்பது தெரிகிறது.

இந் நாட்டின் வடக்கில் ஆரியகம் என்ருெரு நிலப்பகுதி யிருந்ததாக யவனவாசிரியர் குறிப்பு தெரிவிக்கிறது. இப்போதைய மராட்டிய நாடே அக்காலத்து அவ்வாறு வழங்கிவந்ததென்பது ஐயமறத் தெரிவதாகும். அந்நாடு அப்போது ஆரியகம் என வழங்கியதனுல், அப் பகுதியில் ஆரியர் குடியேறிப் பல்கித்தம் ஆரிய நாகரிகத்தைப் பரப்பியிருந்தனராம். அவர்கட்கும் சேரநாட்டவர்க்கும் அடிக்கடி யுளதாகிய கூட்டுறவால், ஆரிய நாகரிகத்தைத் தொடக்கத்தே முதலாவதாகக் கொண்டவர் சேரர்களே என்பது துணியப்படுகிறது. ஆரிய நாகரிகம் தமிழ்நாட்டிற் பரவுவதில் முதலிடந்தந்த அந் நாடே மேனுட்டவரோடு வாணிகம் செய்வதற்கும் முன்னணியில் நிற்பதுமாயிற்று.

இந்நாட்டு மன்னர்கள் பலரும் பொதுவாகச் சேரமான், சேரல், சேரலன், இரும்பொறை, ஆதன், வானவன், குட்டுவன் எனப் பல வேறு முடிபுடைய பெயர்களால் அழைக்கப்படுகின்றனர். இவர்

களைப் பற்றிய குறிப்புகளும் மிகச் சுருக்கமாகவே கிடைக்கின்றன. ஆராய்ச்சி நாட்டம் பெருகியிருக்கும் இக் காலத்திலும், பாண்டிய ராட்சியும் சோழராட்சியும் பற்றிய ஆராய்ச்சி நூல்கள் வெளி வந்திருக்க, சேரர் ஆட்சிபற்றிய குறிப்புகள் வெளிப்படாமலிருப்பதொன்றே இவ்வாராய்ச்சியின் அருமையைக் காட்டுகின்றது.

மேலும் இச் சேரமன்னர்களின் பெயர்கள் மேலே கூறியவாறு பொதுநிலையில் வழங்கப் பெறுவதால் ஆராய்ச்சிக்காலத்து மிக்க மயக்கமுண்டாகிறது. பாடினோர்காலத்து அம்மன்னரது சிறப்புப் பெயர் இயற்பெயர் முதலியன தெரிந்திருக்குமென்பதில் ஐயமில்லையெனினும், அவை அவரால் விளங்கக் குறிக்கப்படாமையின் இம் மயக்கத்துக் கிடமுண்டாகிறது. இச் சேர மன்னர்களின் பெயர்கள் அவரவர் இயற்பெயர் பின்வருவது நோக்கின் சேரல், சேரலாதன், இரும்பொறை முதலியன அவர்தம் குடிப்பெயரா யிருக்கலாமோ என்ற வெண்ணம் பிறக்கின்றது. குடிப்பிறந்தார் அனைவர்க்கும் அப்பெயரே வழங்கப்படாமை காண்கிறபொழுது அவ்வெண்ணந்தானும் வீழ்ந்துபோகிறது. இதனுல் ஆராய்ச்சியாளர் பலர் ஊக்கமிழந்து போகின்றனர். சேரரைப்பற்றிய நூல்களையும் பிற்கால வரலாறுகளையும் சேரநாட்டு ஒழுகலாறுகளையும் அறிஞர் நன்கு ஆராய்ந்து வெளியிடுவரேல் தமிழ்நாட்டின் பழைய வரலாறு ஒருவாறு உணரப்படுதற்கு நல்ல வாயிலாம். ஆதலால், இவ்வாராய்ச்சிக்கண் அறிஞரது கருத்து விரைந்து செல்லும் என்று நன்மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

சேக்கிழாரும் கம்பரும்.

பாலூர், வித்துவான். து. கண்ணப்ப முதலியார்,
திருவல்லிக்கேணி, சென்னை.

(முற்றொடர்ச்சி : துணர் உக, மலர் ச, பக்கம் 96)

இனிக் கிஷ்கிந்தா காண்டத்தில் காணும் கம்பரது செய்யுளையும் அச் செய்யுளின் கருத்தை எங்கிருந்துகொண்டனர் என்பதற்குச் சேக்கிழார் பெருமானுர் பாடியுள்ள இளையான்குடிமாறநாயனுர் புராணத்தில் காணும் ஒரு செய்யுளையும் காண்போம். முதலில் குன்றையாளியார் பாடலைப் பார்ப்போம். இளையான்குடிமாற நாயனுர் தாம் மேற்கொண்ட அடியார்களுக்கு அன்னமிடுதலாகிய திருத்தொண்டைத் தமக்கு எத்துணை முட்டுப்பாடு நேரினும் தடைபடாது செய்துகொண்டே வந்தனர். இந்நிலையில் இறைவன் இவரது உண்மை அன்பினை உலகினர் அறியத் திருவுளங்கொண்டனர்; கொண்டவர் அடியார் தாங்கொணுத் துயரில் கலங்கி நிற்கையில் அவரிடம் செல்ல ஒருப்பட்டனர். அந் நிலையை இறைவன் மேற்கொண்டதைச் சேக்கிழார் வெகு அழகாகக் கூறியுள்ளார். அஃதாவது இறைவன் இளையான்குடிமாற நாயனுர் இல்லம் நோக்கிப் புறப்பட்டார். புறப்பட்ட போது, தம்மோடு இறைவியையேனும், ஊர்ந்து செல்லும் விடையை

யேனும் கொண்டு செல்லாது சென்றனர் என்பதை,

மற்றவர்செயல் இன்ன தன்மைய தாக மாலய னைஅக்
கொற்ற ஏனமும் அன்ன முந்தெரி யாத கொள்கையர் ஆயினர்
பெற்ற மூர்வதும் இன்றி யேஒரு பேதையா ளுடன் இன்றியே
நற்றவத்தவர் வேட மேகொடு ஞாலம் உய்ந்திட நண்ணினர்

எனக் கூறியுள்ளார்.

இக் கவியுள் சேக்கிழார் கூறிய "பேதையாளுடன் இன்றி" என்னும் தொடரின் உட்பொருளை ஊன்றிக் கவனித்தல் வேண்டும். இறைவி அருளே திருமேனியாக உள்ளவள் என்பதும், அவள் உடன் இருப்பின் தான் செய்யப்போகும் கொடுஞ் செயலுக்கு ஒரு சிறிதும் ஒருப்படாள் என்பதும், ஆதலின் இறைவன் அவளைத் தான் மேற் கொண்ட செயலுக்குத் தடையாகுமென அழைத்துச் சென்றிலன் என்பதும் முதலிய பொருள்கள் தொனிக்கின்றன.

இவ் வுள்ளுறைப் பொருளை நன்கு உணர்ந்தவர், கம்பர். அத் தொடரின் கருத்தைத் தகுந்த இடத்தில் அமைத்துக் கொள்ளக் கருதியவராய் அதற்கு இடமாக வாலிவதைப் படலத்தைக் கொண்டனர். இராமன் வாலியின் மீது மறைந்துநின்று தனது அம்பைச் செலுத்தி விட்டான். அவ்வாறு செலுத்திய அம்பை வாலி இது இராமனுடையது என்பதை உணர்ந்தான். அதற்குள் மறைந்திருந்த இராமன் வாலியின் முன்பு வந்து நின்றான். நின்ற இராமனை நோக்கி, 'ஏ இராமா! நீ சூரிய குலத்தில் தோன்றியவன் அன்றோ! அச் சூரிய குலம் அரச தருமத்தையே தனக்கு உடைமைப் பொருளாகக் கொண்டதன்றோ! அப்படி இருந்தும் நீ அத் தருமத்திற்கு மாறாக மறைந்து நின்று என்மீது அம்பைச் செலுத்தினையே, இது உன் தவறு அன்று. ஏனெனில் உனது மனைவியாகிய சீதை இதுபோது உன்னுடன் இல்லை. அவள் இருப்பின் இத்தகைய தகாத கொடுஞ் செயலைப் புரியாய். அவள் இல்லாமையால் நீ திகைத்துப்போய் இவ்வாறு செய்தாய் என்று பொருள் பொதிய,

கோவியல் தருமம் உங்கள் குலத்துதித் தோர்கட் கெல்லாம்
ஓவியத் தெழுத ஒண்ணு உருவத்தாய்! உடைமை அன்றோ!
ஆவியைச் சனகன் பெற்ற அன்னத்தை அமிழ்தில் வந்த
தேவியைப் பிரிந்த பின்றைத் திகைத்தனை போலும் செய்கை

எனக் கம்பர் பாடின பாட்டையும் படித்தின்புறுக.

கடைசியாக யுத்தகாண்டத்தில் சேக்கிழாரது கருத்து மிளிர்வதையும் கூறி இக் கட்டுரையை முடிப்பாம். திண்ணனர் புராணத்துள் சேக்கிழார் சுவாமிகள்,

கருவரையொரு தனுவொடுவிசை கடுகியதென முனைநேர்
குரிசின்முன்விடு மடுசரமெதிர் கொலைபயில்பொழு தவையே
பொருகரியொடு சினவரியிடை புரையறவுடல் புகலல்
வருமிரவொடு பகலணைவன வெனமிடையுமவ் வனமே

என ஒரு பாடலைக் கூறியுள்ளார். அதில் ஒரு கரியமலை வில்லுடன் புறப்பட்டால் எப்படியோ, அப்படித் திண்ணனர் வில்லுடன் புறப்பட்டுக் காட்டில் நுழைந்து யானையின்மீதும் சிங்கத்தின்மீதும் அம்பு

களைச் செலுத்த அவை இரண்டும் அக் காட்டில் கும்பல் கும்பலாகக் கூடி இருந்தன. அவ்வாறு யானையும் சிங்கமும் கூடியிருப்பது இரவும் பகலும் ஒன்று சேர்ந்திருப்பனபோல இருக்கின்றன என்று அவற்றின் நிறத்திற்குத் தக்க உவமையையே கூறி அழகுபடுத்தினர். கம்பர் இவ் வுவமையைக் கைப்பற்றினர். அதுவும் தக்க இடத்தில் அமைக்கவும் எண்ணினர். எண்ணியவர் யுத்தகாண்டத்திலே விபீடணன் அடைக்கலப்படலத்திலே விபீடணனும் சுக்கிரீவனும் ஒருவரை ஒருவர் கண்டபோது தழுவிய நிலையை இவ் வுவமையால் விளக்கியது மிகமிகப் பொருத்தமும் அழகும் வாய்ந்தது. அப்பாடல்,

> தொல்லரும் காலம் எல்லாம் பழகினும் தூயர் அல்லார்
> புல்லலர் உள்ளம் தூயார் பொருந்துவர் எதிர்ந்த ஞான்றே
> ஒல்லைவந் துணர்வு தோன்ற இருவரும் ஒருநாள் உற்ற
> எல்லியும் இரவும்போலத் தழுவினர் எழுவின் தோளார்

என்பது. இதனையும் அன்பர் படித்து இன்புறுவாராக. இப்படிக் கம்பர் ஒவ்வோர் காண்டத்திலும் (ஊன்றிக் கவனித்து ஒத்திட்டுப் பார்ப்பின் ஒவ்வொரு படலத்தினும்) சேக்கிழாரது சொல்லையும் பொருளையும் பெரிதும் எடுத்து, ஆண்டிருப்பதை அன்பர்கள் அறிவார்களாக.

இத்தகைய கம்பநாடுடைய வள்ளல் நன்னூலார் தாம் மேற்கோளாகத் தமது நூலில் எடுத்துக் காட்டிய 'முன்னோர் மொழி பொருளே அன்றி அவர் மொழியும் பொன்னேபோல் போற்றுவம் என்பதற்கும்—முன்னோரின் வேறு நூல் செய்துமெனும் மேற்கோளில் என்பதற்கும், கூறுபழஞ் சூத்திரத்தின் கோள்' என்னும் வெண்பாவிற்கு ஓர் சிறந்த எடுத்துக்காட்டாக மிளிர்வதைக் கண்டு அவர் அடியை நாமும் பின்பற்றுவோமாக.

மானமாவும் நன்மாவும்.

K. சோமசுந்தரம்பிள்ளை அவர்கள், B. A., B. L., தஞ்சை.

அறிவினுல் உலகிற்குச் சிறந்த அறிவுப் பணிபுரிந்த அரிய தமிழகச் சான்றோர் மறனிழுக்கா மானத்தின் நிலையுடைமை கருதி அதனையே தம்முயிரினும் இனிதாகப் பேணினரென்ற பேருண்மை செந்தமிழிலக்கியங்களிற் றிகழ்தலைக் காணலாம். அறிவும் அன்பும் முதிர்ந்து மக்கள் இறைவனிடம் மன மூன்ற, மண் வாழ்வில், மானமுடைய வாழ்க்கையே இன்றியமையாத சிறப்புத் தன்மை வாய்ந்துள்ளது. வையத்தில் வாழ்வாங்கு வாழும் நெறியைக் கடைப்பிடித்து அறிவு அறிவை அறியும் விழுமியோர் தமது நிலைமையில் எஞ்ஞான்றும் திரியாது தமது தன்மை குன்றுவன செய்யாமையும், இளிவரவு பொருமையும், இகழ்வார் மாட்டுச் செல்லாமையுமே ஓம்புவர். எனவே குன்றுப்புகழ் விளக்கும் மானத்தை, என்றேனும்

ஓர் நாளில் பிரிந்தேகும் உயிரினைவிடப் பேணும் மக்கட்பண்பு வாய்ந்து தெளிந்த தலைமையாளர் ஊனுடல் விழைந்து தலை சிறந்த அருளைத் துறந்து இழி தொழிலியற்ற மன மொருப்படார். மான மழிய வந்துழி, உயிரினை யோம்பி ஊண் வளர்த்து வாழும் வாழ்க்கை சாவாமைக்கு மருந்தாமோ? எனவே "மான மழிந்த பின் வாழாமை முன்னினிதே" யாகும். ஆகவே மானம், மன்னு உலகத்து மன்னுயிரை மாட்சிப்படுத்தி வருதலான் தமக்கோரிழிவு வந்துற்ற காலை உயிர் வாழாத மான முடையவரது ஒள்ளிய புகழை உலகம் தொழு திசைக்கும். உயிரினும் மதிக்கற்பாலது: உள்ளப் பேருறையின் உள்ளது: அயிறரும் பனிக்கும் திண்மை மானம்' என்பது சூளாமணி.

சேரமான் கணைக்காலிரும் பொறைக்கும் சோழன் செங்கணு னுக்கு மிடையே திருப்போர்ப் புறத்துப் போர் முற்றிய வழி, சோழன் சேரமானைக் குடவாயிற் கோட்டத்துச் சிறையில் வைத்த ஞான்று, ஓர் நாள் சேரமான் உண்ணீர் வேட்கையுடையவராய், சிறைக்காவ லரை உண்ணீர் வேண்டியபொழுது, அன்னுன் வேட்கை தீர்க்கும் அமயத்தில்லாது காலந்தாழ்த்திக் கொடுத்ததின் காரணமாக, மானங் கருதி அதனைப் பருக மறுத்து, துஞ்சுங்காலை, அவன் பொருளொடு கூறிய சொல் வளம் பழுனிய செய்யுள் வருமாறு:—

குழவி யிறப்பினும் ஊன்றடி பிறப்பினும்
ஆளன்று என்று வாளிற் றப்பார்
தொடர்ப்படு ஞமலியின் இடர்ப்படுத் திரீஇய
கேளல் கேளிர் வேளாண் சிறுபதம்
மதுகை யின்றி வயிற்றுத்தீத் தணியத்
தாமிரந் துண்ணு மளவை
யீன்ம ரோஇவ் வுலகத் தானே.'

"மன்னர்களில் அமரிடை வீழ்ந்தாரே துறக்கம் பெறுவர். ஆதலால் நான் பகைவர் வாளால் இறந்து பட்டிருத்தல் வேண்டும். இவ னுண்மையுடைய னல்லனென்று வாளாற் கொல்லாராய், சங்கிலியாற் பிணிக்கப்பட்ட ஞமலிபோல் என்னை இவண் இடர்ப்படுத்திருத்தினர். இவ்வண்ணம் இடர்ப்படுத்திருத்திய கேளல் கேளிராகிய சிறைக் கோட்டங் காவலர் தந்த தண்ணீரை வேட்கை தணித்தற் பொருட்டு மனவலியின்றி இரந்துண்ணக் கடவேனே? இஞ்ஞாலத்துச் சாக் குழவி ஊன்பிண்டம் என்பன பிறப்பினும் இவ்வண்ணம் இரந் துண்ணு மளவாக மகப் பெறுவாருளரோ? எனச் சேரமான் கூறி உயிர் நீத்ததனுன், அம்மன்னன், மானத்தின் மிக்க அறனும் பொருளும் இன்பமு மின்றெனவும், மான அருங்கலத்தை உயிரினும் சிறந்ததாக மதித்திருந்தான் என்ற உண்மையும் திண்மையும் ஒருவாறு புலனுதல் கண் கூடு. எனவே மானமாவது 'தன்னிலைமையிற்றுழாமையும், தெய்வத்தாற்றுழ்வு வந்துழி உயிர் வாழாமையுமாம்'.

மாந்தரும் விலங்கும் இயங்கு திணை யெனப்படும் சர வுலகின் பாற் படுவனவாயினும் இவ்வாறு மான நலம் வாய்ந்து பகுத்தறி வென்னும் நல்லறிவுடைய மாந்தரைப் போன்று விலங்குகளும் அறிந் தொழுகுமாயின், அவை தெய்வங்களாகக் கருதிப் போற்றப்படுமென்று

புலப்பட, கல்வியிற் பெரியாராகிய கம்பர்.

தக்க வின்ன தகாதன இன்னவென்று,
ஒக்க உன்னல ராயின் உயர்ந்துள
மக்களும் விலங்கே மனுவின் நெறி
புக்க வேல்அவ் விலங்கும் புத்தேளிரே

எனக் கூறலுற்றார். இவ்வாறு மான நிலைக்கு இனமாய்த் தமிழுலகத்திற்குத் தெரிந்தும் தமிழ் நூல் ஆட்சியிலே முறைது வழங்கி வந்துள்ளவை கவரி மாவும் அசுண மாவுமென்க. இவைகளைப்பற்றி மறுபுல நூல்களில் எடுத்து வழங்கப்படாததனுன், இவை தமிழகத்திலே முந்தையில் இருந்ததாக அறியப்படுகின்றது. இயற்றமிழ் இலக்கண முதனூலாகிய தொல்காப்பியத்தில் " புல் வாய் நவ்வி உழையே கவரி, சொல்வாய் நாடின் பிணை எனப்படுமே" எனவும், அசுண மாவைப் பற்றிக் 'குன்றுறையசுணம்' எனவும் எடுத்தாளப்பட்டது அறிதற்பாற்று. மற்றும், மற்றைய சங்க இலக்கிய நூல்களும் அறிவறிந்த மக்கட் பிறவியினும் உயர்த்துகின்ற சிறப்புக் குணமும் மெல்லியல்பும் இவ்விலங்கினங்கள் இயல்பாக அமைந்துள்ள வகையினைப் பரிந்து பரக்கக் கூறியுள்ளன.

மான நிலைக்கு இனமாய் மருவி வாழ்ந்த கவரிமாவினைப் பற்றிக் கூறும் பண்டை நூல்களில் சில பின் வருமாறு உணர்த்தும் வகை காண்க.

(க) மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின் (குறள்)

(உ) மானமாக் கவரிவெண் மயிரின் வேய்ந்தன (சிந்தாமணி)

(ங) கவரி முச்சிக்கார் விரிக் கூந்தல்
ஊசன் மேவற் சேயிழை மகளிர். (பதிற்றுப்பத்து)

(ச) நரந்தை நறும்புன் மேய்ந்த கவரி
குவளைப் பைஞ்சுனைப் பருகி யயல
தகரத் தண்ணிழற் பிணை யொடுவதியும்
வடதிசை யதுவே வான்றோ யிமயம் (புறம்)

(ரு) மானமா மணி வீழ்த்துயிர்க்கு
ஊனமாமென ஓடுவீர்
ஈன ஓர் மயிர்க்கு ஏதமாம்
கானமாவது காணுமே (சூளாமணி)

கவரிமா என்பது மானினத்தைச் சார்ந்தது. பிங்கலந்தையில் 'எகினம் மானமாபட்டம் கவரிமா' எனப்படுதலின், இஃது மானமா வெனவும் வழங்கப் படுகின்றது. இக் கவரிமா தன் பிணையுடன் பொற்கோட்டி மயத்திலும் பொதியத்திலும், அறலுடை இறும்பிலும், மலர்ந்த வெண்காந்தட்பூ இலை தழைத்த குளவியுடனே கமழும் மலைச் சாரல்களிலும் நிலைத்துவதியும். நரந்தம் எனும் பூவையும், புல்லையும் மேய்ந்து உளங்களிக்கும். எஞ்ஞான்றும் தன் பிணையுடன் மதர்வையோடு மருண்டு நோக்கும் இயல்பினையுடையது. இவைகளின் உயிர்ப்பால் காற்று மிகத் தூய்மை பெறுமென்பது அறிஞர்தம்

கோளாகும். செறிந்து நெரிந்து கருமையுடைய மயிர்த்தொகுதி யுடையது. இதனானே இதுபோதும் குறைந்த குரலுடை ஆயிழை யார் இக் கவரியின் மயிர்முடியை ஒருங்கு சேர்த்துக் கட்டி நிறைந்த கூந்தலை யுடையார்போல் விழைந்து பொலிவுறத் தோன்றுவர். கவரி மாவின் மயிர்த்தொகுதிகள் கருமை கனிந்ததோ டமையாது வெண்ணிறமாகவும் அமைந்துள்ளனவென்பது 'கவரிபால் நிறவால் புடை பெயர் வனகடிதில், பவளமால் வரை அருவியைப் பொருவிய பாராய்' என்ற கம்பர் வாக்கானும் உய்த்துணரக் கிடக்கின்றது. புற அழகிற்குக் கவரி மயிரைத் தம் கூந்தலுடன் பிணைத்து வனைந்து மகிழும் மகளிர் இதன் அக மெல்லியல்பை உயிரில் புனைந்து நுனித்தறியாதும், தகைமை வலியழிய வந்தவிடத்தும் உயிரொன்றினையே யோம்பி சீரல்லராய் இழிநிலை தானே எய்துகின்றமையான், இன்னவர் பகுத்தறியும் தன்மையிலராய் அஃறிணையின்பாற் படுவரென்க.

திரள்திரளாக மலைக்காடுகளில் கவரிமான்கள் அலையுங்கால், அவைகள்பாலுள்ள ஓர் மயிர் மரஞ் செடி கொடிகள்பால் சிக்கின், அம்மயிரினையும் நீக்க மனஞ் சகியாது அவ்விடமே நிலையாய் நின்று தானாகவே உயிரினை உகுக்கும். இக் கானமாவைப் போன்று நாட்டில் வழுவின்றிப் பெரும்புகழுடன் ஒழுகும் குணநலஞ் சார்ந்த மேலோர் தம் குண நலங்கள் குன்றநேரினும் பிறர் உணர்த்தற்கிடமின்றி அக்கணமே உயிர் விடுவர். 'மானம் நோக்கில் கவரிமா அனைய நீரார்' என்ற கம்பரது வாக்கு உரங்கிளர்கின்ற நுட்பம் வாய்ந்துள்ளதென்பது நுனித்து நோக்கற்பாலதேயாம். இதுபற்றியன்றே பழைய பண்பு வழுவாது மானமுள்ள வாய்மைக் குடிப்பிறந்தாரைக் குறித்துக் கூறுங்கால் 'நல்ல கவரிமான் கன்று' எனவும், தமது நிலையினின்றும் திரிந்து மானங்கெடத் தாழ ஒழுகினாரைக் 'கழுதை' யெனவும் பண்டுதொட்டுத் தமிழுலகம் வழங்கிவருவது ஈண்டறிந்து மகிழற்பாலதாம்.

ஓர் மயிரறின் உயிர்வாழாத கானுறு கவரிமாவைப்போன்று கனம்பெறு புகழையுடையது பறைபடவாழா அசுண நன்மா. அறிவு கனிந்த பண்டைய நறுந்தமிழ் நூல்களில் இதன் மெல்லியல்பும் நலனும் வழங்கப்பட்டு வந்துள்ளமை காணப்பெறலாம்.

(க) மறையிற்றன் யாழ்கேட்ட மானை அருளாது
அறைகொன்று மற்றதன் ஆருயிர் எஞ்சப்
பறையறைந்தாங் கொருவன் நீத்தான் (நெய்தற்கலி)

(உ) இன்னளிக் குரல்கேட்ட அசுணமா (சிந்தாமணி)

(ங) குலவுகாற் கோவலர் கொன்றைத் திங்குழல்
உலவுநீள் அசுணமா உறங்கும் என்பவே (சூளாமணி)

(ச) இசைகொள் சீறியாழ் இன்னிசை கேட்ட
அசுண நன்மா அங்கிலைக் கண்ணே
பறையொலி கேட்டுத் தன்படி மறந்தது (பெருங்கதை)

(ரு) இருங்கல் விடரளை யசுண மோர்க்கும் (அகம்)

என வருவனவற்றால் அசுணமா என்பது இசையறிவதோர் விலங்கென்பதனை யாம் நன்கறியலாம். கலையுணர்வுடைய இவ்வசுணமா

மக்களைப்போன்று இசையுணர்வுடைமையால் 'இசையறிமா' என்ற பிறிதொரு பெயரும் பெற்றுளது. இசையுணர்வோடு இசைச் சுவையு முணர்ந்து நுகரும் தன்மையால் அதன் உயரியல்பு கருதி 'நன்மா' எனக் கழறுவர், அமிழ்துறழ் இசைத்தமிழ் மரபிற் பழகிய நுண் ணறிஞர். பிங்கலந்தையில் 'அசுணமா இசையறி பறவை கேகயப்புள்' எனக் குறிக்கப்பட்டிருப்பதனுன், இஃது பறவை இனத்தைச் சார்ந்த தென்பர். அசுணமாகிய விலங்கு தூம மேனியுடையது. நறு மணங் கமழும் குன்றுறை வாழ்க்கையுடையது. இனமுடன் கூட் டங் கூட்டமாய் வாழுந் தன்மையது. கனிந்த குறிஞ்சிப் பாக்கள் கேட்கும் வியத்தகு விருப்பினைக் கொண்டுள்ளது. வண்டுகள் முர லினும் அதனை யாழின் இசையெனக் கருதி ஐது வந்து உள்ள முரு கித் தன்வயமற்று நிற்கும் மாண்பினையுடைய தென்பது.

விழுந்த மாரிப் பெருந்தண் சாரற்
கூதிர் கூதளத் தலரி நாறு
மாதர் வண்டினயவருந் தீங்குரன்
மணநாறு சிலம்பி னசுண மோர்க்கு(ம்)

என்ற கூற்றங் குமரனுர் நற்றிணைப் பாவால் நன்குணரலாகும். பறை யொலி போன்ற வல்லோசையைக் கேட்கப் பொருதது. உணவுக்கும் இயல்புக்கும் தொடர்புண்டாதலின், இதனியல்புக்கேற்ற உணவு பசும் புல்லும், இறுகு புல்லும் துனி நீருமே. இதனுள்ளம் அமைதிப் பொய்கை என நவிலுவர் ஆன்ற கலையறிவும் சான்ற நல்லிசையு முடைய அறிவின் மிக்கார். இஃது இன்னிசைக்கு செவி சாய்த்துக் கொண்டிருக்கும் நிலையின் கண்ணே, வல்லோசை கேட்க நேரின், உயிர் வாழாது. இசைச்சுவை யுணர்வினையுடைய இவ் வசுணமாவின் வல்லோசை பொரு நிலையினைக் காணுங்கால், அஃது வல்லோசை களையும் வசைமொழியும் கேட்டு மானங் கைவிட்டுத் தொழுது திரியும் இழிந்த மாந்தரைவிட எத்துணை ஏற்றம் வாய்ந்த தென்பது ஒருவாறு துணியப்படும்.

மானங்காத்து மறுப்படாத வாழ்க்கை யியல்பை யுணர்த்தி நிற்கும் கவரிமாவும், மானமுடன் நல்லோசை கேட்டு அருகணையும் உயிரியல்பினை யுணர்த்தி நிற்கும் அசுண மாவும், விலங்கு வகையின் பாற் படுமாயினும், மானம் பேணும் உள்ளுணர்வுடைய உத்தமர் களுக்கு உவமையாக வந்துள்ளமை வெளிப்படை. நுண் மாண் நுழை புலமுடைய பண்டைத் தமிழ்ப் பேரறிஞர்களால், பொருட் புலப் பாட்டிற்கு உவமைகளாக எடுத்தாளப்பட்டு, பெரிதும் போற்றப்படும் கவரிமாவும் அசுண மாவும், கற்றோர் செந்நாப் பழகிவரினும், அவை களை இஞ்ஞான்று யாண்டும் காண்டலரிது. இத்தகைய நல்லியல்புகள் இயற்கையாய் கவரி மாவுக்கும் அசுண மாவுக்கும் உறைந்துள்ளமையே இவைகளின் மறைவினிற் கிடனுயிற்று. கானுறை வாழ்க்கையுடைய வீளையம்பின் வல் வில் வேட்டுவர் பல் உடம்பழிக்கும் பழியூண் உண வினராதல் பற்றிக் கவரிமாவை தன் மயிர்த்திரளில் ஓர் மயிர் சிக்கிக் கொள்ளும் வண்ணம் முட்செடி கொடிகள் செறிந்த காட்டில் விரட்டி, யாதேனும் ஊறு அதற்குறும் வண்ணம் செய்தும், இசையறி விலங் காகிய அசுண நன்மாவை யாழின் இன்னேசை காட்டி வஞ்சித்து, அக்கணமே செவியிலேற்கவொணுக் கொடிய பறை யொலியை எழுப்

பித்தும் அவைகளைக் கொல்லச் சூழ்ச்சி செய்ததினுனே, புன்மை தீர்ந்து நன்மை சார்ந்து பண்டு தமிழகத்தில் உவகையுடன் உள்ளுவந்து வாழ்ந்த கவரி மாவும் அசுண நன் மாவும், எற்புச் சட்டங்கள் கூடக் காணவியலாதபடி விரைவில் மறையலாயின. எனினும், குண எழி லுடையவை கடிதில் மறையினும், அவற்றின் மணம் எஞ்ஞான்றும் நிலவி நிற்குமென்பது ஈண்டுணரற் பாற்று.

வரையாது நெடுங்காலம் களவில் வந்தொழுகும் தலைமகனை நினைந்து ஆற்ருளாகிய தலைமகள், தன்னை வருந்தாதே யென்று பல காலும் தோழி கூறுதலானே தாங்காது, தலைவனை முயங்குங்கால் எழிலும், பிரியுங்கால் பசலையுந் தோன்றுதலால், அவனது மார்பு அசுணங்கொல்வார் கைபோன்று இன்பமும் துன்பமு முடைத்தென எதிர் மொழிந்ததாகக் கூறநிற்கும்

* * *

அசுணங் கொல்பவர் கையேபோன்று
மின்பமுந் துன்பமு முடைத்தே
தண்கமழ் நறுந்தார் விறலோன் மார்பே.

என்ற நற்றிணைச் செய்யுளான், அசுணமாவகை மறைந் தொழிந்த மாயம் குறிப்பானுணர்த்தப்பட்டவாறு தெளிக.

பறைபட வாழா அசுண நன்மாவும் மயிர் நீப்பின் வாழாக் கவரி மாவும் மறைந்த ஞான்றும் அவற்றின் நீர்மையும் நிலைமையும் மெல் லியல்பும் எஞ்ஞான்றும் தேமதுரத் தமிழ்ச் சொல்லால் தனிச் சிறப்பு வாய்ந்து, தாழ்வுதாளாத உள்ள இயல்பிற்கும் உயர் குணத்திற்கும் இயலுரிமையாய் இசைபெற்றுள்ளதாதலின், மனிதப்பிறவி தாங்கிய உயிர்கள் மாக்களாகாது, மக்களாய் வாழ்ந்து மானம் பேணுதற்கு அவைகளைக் சட்டளைக் கல்லாகத் தலையாய தமிழ்ச் சான்ருேர் உல கிற்கு உணர்த்திவைத்துள்ள பெற்றி கருத்தில் நன்கு பதிப்பிக்கற் பாற்று.

வீரம்.

வித்துவான். S. பொன்னுசாமி அவர்கள்,
திருச்சி அனைத்திந்திய வானொலியிற் பேசியது.

"கைவேல் களிற்ரெடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும்."

இக்குறளில் வள்ளுவர் பெருமான் பண்டைப் போர் வீரரின் இயல் பினை இனிது விளக்குகின்ருர். வீரனெருவன் தன்னை எதிர்த்து வந்த யானையைத் தன் கைவேலால் எறிந்து ஓடச்செய்தான். வேறு பல யானைகளும் அவனை எதிர்த்தன. அவைகளின்மேல் எறிய வேலில் லையே என வருந்தினன். வருந்தியவன் தன் மார்பில் தைத்துள்ள வேலைக்கண்டு கையால் பிடுங்கியவாறு மகிழ்வுற்ருன்.

என்னே அவன் செய்கை! மார்பிலே பட்ட வேலையும் அறியாது போர் செய்துள்ளான்; மீண்டும் போர்புரிய வேல் கிடைத்தவுடன் மகிழ்வுற்றான். இச்செய்கை, அவன் போர்மேல், கொண்டுள்ள விருப்பத்தையும், அவன் உள்ளத்தே எழுந்த வீர உணர்ச்சியையும் உணர்த்துகின்றது.

வீரம் உள்ளத்தின்கண் நிகழும் நிகழ்ச்சிகளில் ஒன்று. நம் முன்னோர், உலகத்தார் உள்ளத்தே நிகழும் நிகழ்ச்சிகளை ஒன்பதாக வகுத்துள்ளனர். அவை புறத்தார்க்கு ஒருவாற்றான் புலனாகின்றமையின், அவைகளை 'மெய்ப்பாடு' என்று தொல்காப்பியர் கூறுவர். அவ்வுணர்ச்சி சொல்லாலும் செயலாலும் வெளிப்படும்.

சொல்லால் புறத்தார்க்குப் புலனாகும் வீர உணர்ச்சியை 'நெடுமொழி கூறல்' என்பர் தமிழ் இலக்கண நூலோர். மார்பில் தைத்த வேலைப் பறித்து மகிழ்ந்த வீரன், தன் உள்ளத்தே நிகழ்ந்த வீர உணர்ச்சியைச் செயலால் வெளிப்படுத்தியது படை வீரமெனப்படும்.

இனி, பண்டைத் தமிழரிடையே தோன்றிய வீர உணர்ச்சியை ஆராய்வோம். தன் அரசனுடன், வேற்றரசன் போர்புரியக் கருத்துக் கொண்டிருப்பதை அறிந்தான் ஓர் வீரன். அறிந்தவன் அப்பகைவரை நோக்கி, 'எங்கள் அரசனை எதிர்த்து வெற்றிபெற இயலாது. ஆகையின் போரிடாது ஒழிதலே சிறந்தது. எம் மன்னரை எதிர்த்தோர், இன்று அவர்களுக்காக நடப்பட்ட கல்லில் நிற்கின்றனர். நீவிரும் அவ்வாறு கல்லில் நிற்க விரும்பினால் போரிடலாம்' என்ற வீரன் கூற்றை,

> "என்னைமுன் நில்லன்மின் தெவ்விர் பலரென்னை
> முன்னின்று கன்னின்றவர்"

எனும் குறளின் வாயிலாக நாயனார் வெளிப்படுத்தினார்.

ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன், தன் பகைவர்கள் யாவரும் ஒன்றுகூடித் தன்மேல் போரிடக் கருதினர் என்பதை அறிந்து, 'என் பகைவர்களைப் போரில் புறங்கொடுத்துத் தங்கள் தேருடன் ஓடச் செய்வேன்; அவ்வாறு செய்யேனாயின் என் ஆருயிர் அனையாளை விட்டு அகல்வேன்; மாவன் முதலிய சிறந்த நண்பர்களோடு உரையாடி மகிழ்தலை ஒழிவேன்; குடிகளை வருத்திய கொடுங்கோல் அரசனாவேன்; எனக்கு உரிய பாண்டிநாட்டை விட்டுப் பகைவர் நாட்டில் பிறக்கக் கடவேன்' எனும் வீரமொழி புகன்றான்.

வெள்ளத்தைத் தேக்கும் கல்லணைபோல் பகைவர் சேனையைத் தான் மட்டுமே எதிர்த்து நின்று போரிட்டான் ஓர் வீரன். வீரமுடையனாயினும் ஒருவன் என் செய்ய முடியும்! பகைவர்களின் பகழிகளால் படுகாயப் படுத்தப்பட்டுக் கீழ் வீழ்ந்தான். வீரத்தொடு பொருதும் வெற்றி கிட்டவில்லையே என்று எண்ணியவனாய்த் தன் வேலால் காயத்தைக் கிழித்துக்கொண்டு உயிர் நீத்தான். என்னே வீரத்தின் ஆற்றல்!

பார்த்திபனின் மகன் அபிமன்யு தேரிழந்தான்; பின் ஒரு கரமிழந்தான்; அமர்க்களம் விட்டு அகன்றானில்லை. ஒரு கைத் தண்டால் சயத்திரதன் தேர் அழித்தான்; அவன் பாகனையுங் கொன்

றான் ; அவனையும் தனியனாக்கினான் எனும் வீரச் செய்தியை வில்லி புத்தூரார்,

கரமிழந்துமற் றொருகர மிசையொரு கதைகொள்
வெஞ்சினங்களி றனையவனிவன்
இரதமுந் தகர்த்துறுகதியுடன் வரும் இவுளியுந்துணித்
தெதிர்முனை வலவனை
முரணுடன் புடைத் தணிதுவசமும் விழ முதுகு
கண்டபின் ....

என்ற பாரதச் செய்யுளால் விளக்கியுள்ளார்.

இவ் வீரர்களின் உள்ளத்தே எழுந்த உணர்ச்சி அவர்களது வீர உரையினாலும், போரிலே புரிந்த வீரச் செயலினாலும் வெளிப்பட்டுள்ளது அறியற்பாலது.

தமிழ் மறவர் முன்வைத்த காலைப் பின் வையாது போர் செய்வர் ; புறங்காட்டுவதென்பது எக்காலத்தும் இல்லை ; போரில் தோற்றுப்போக நேரிடின் வாழ்க்கையில் வெறுப்புற்று வடக்கிருந்து உயிர் விடுவர், அல்லது துறவு பூணுவர். உறையூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்த கோப்பெருஞ் சோழன் பகைவர்க்குத் தோற்றதைப் பொறாது வடக்கிருந்து உயிர்நீத்தான். இத் தமிழ் மன்னனின் வீரமும், மானமும் எத்துணைச் சிறப்புடைத்து !

தமிழரின் இத்தகைய மறத்திறன் அறத்துறை வழுவாதென்பது அறிந்து இன்புறற்பாலது.

போர்புரியக் கருதும் அரசன், பகைவேந்தன் நாட்டினர்க்குத் தன் கருத்தை முன்னர் அறிவித்து,

ஆவும், ஆனியல் பார்ப்பன மாக்களும்,
பெண்டிரும், பிணியுடையீரும், பேணித்
தென்புல வாழ்நர்க்(கு) அருங்கடன் இறுக்கும்
பொன்போல் புதல்வர்ப் பெறாதீரும்
எம்மம்பு கடிவிடுதும் நும்மரண் சேர்மின்......'

என்று பசுக்களும், பெண்களும், நோயாளிகளும், இறந்தோர்க்குச் செய்யும் கடமைகளையுடைய புதல்வரைப் பெறாதோரும் தங்கட்குத் தகுந்த பாதுகாவலான இடத்தைச் சேருங்கள் ; யாங்கள் விரைவில் போரிடப்போகிறோம் என அறிவிக்கச்செய்வான். இவ்வாறு அறிவித்துப் போர்புரிதலே அறப்போர், வீரப்போரெனக் கருதினர் நந் தமிழர். அறிவித்ததோடு நில்லாது, பாதுகாவலைத் தேடிக்கொள்ள முடியாத பசுக்களைப் பாதுகாப்பதற்காகத் தாங்களே கொண்டு செல்வர்.

பண்டைநாளில், மன்னரும் ஏனையோரும் வீரர்க்குப் பெருஞ் சிறப்புச் செய்வர். போரில் ஓடாது நின்று வீரச்செயல் புரிந்த இளம் பிராயத்தானுக்கு வீரக்கழல் கட்டி ஏனைவீரர் கழனிலைக் கூத்தாடுவர். கழல்கட்டுதலே அன்றி, கொடிமுதலியவும் அவற்குக் கொடுப்பர். வாளால் போர் செய்துயர்ந்த அரசிளங்குமரனுக்கு, அந்நாட்டார் பறையொலி முழங்க அரசு கொடுப்பர். போரிலே வைத்தகால்

வாங்காது முன்னின்று பொருத வேந்தனைத், தன்னாட்டகத்துக் கேடு வருங்கால் உலர்ந்தும், வாராக்கால் தழைந்தும் நின்று பின்னிகழும் நிமித்தங்களைக் காட்டும் தெய்வத்தன்மை வாய்ந்த உன்னமரத்தோடு சேர்த்துப்புகழ்வர். போரிலே வென்ற வீரர்க்கு '**எட்டி**' '**காவிதி**' முதலிய பட்டமும், நாடும் கொடுத்தல் பண்டை வழக்கு. குலோத் துங்கன் தன் சேனைத்தலைவனாகிய கருணாகரத் தொண்டைமானுக்கு 'மகாசாமந்தன்' என்ற பட்டம் வழங்கியும், வண்டாழஞ்சேரியைத் (தற்போது வண்டுவாஞ்சேரியென வழங்கப்படுகிறது; கீழத்தஞ்சை யைச் சார்ந்தது) தலைநகராகக்கொண்ட நாட்டைக் கொடுத்தும் சிறப் பித்தான்.

போரில், சிறந்த வீரனொருவன் பட்டு விழ்ந்தால், அவன் வீழ்ந்த விடத்தே கல்நடுதல் அக்கால வழக்கு. கல்லிருக்கும் இடங்கண்டு, உரியகல்லை ஆராய்ந்து அவ்வீரனது உருவாக்கி, நல்லநாளிலே அவன் பெயரும் பீடும் எழுதி, நன்னீராட்டித் தூய்மைசெய்து குறித்த இடத்தே நடுவர். இது '**நடுகல்**' என்றும், '**வீரக்கல்**' என்றும் தமிழ் நூல்களில் வழங்கப்படும்.

இனி வீரத்தைப்பற்றித் தொல்காப்பியர் கூறுவதை ஆராய் வோம்.

தொல்காப்பியர் கல்வி, தறுகண், புகழ், கொடை என்ற நான்கு மூலமான பொருள்கள் பற்றி வீரம் பிறக்கும் என்பதை

"கல்வி தறுகண் இசைமை கொடையெனச்
சொல்லப் பட்ட பெருமிதம் நான்கே."

என்னும் சூத்திரத்தின் வாயிலாகக் கூறியுள்ளார். அவர் வீரத்தைப் பெருமிதம் எனக் குறிப்பிடுகின்றார். யாவரொடும் ஒப்ப நில்லாது மேம்பட்டு நிற்றலின், பெருமிதம் எனுஞ்சொல்லால் வீரம் குறிப் பிடப்படுகின்றது. எனவே, போர்ச்செயலிற் காட்டும் ஆண்மையை மட்டும் அவர் வீரம் எனக்கொண்டிலர் என்பது பெறப்படும். இந் நான்கினுள் முன்னர், கூறிய படைவீரம் தறுகண் பற்றியதாகும்.

பூதப்பாண்டியன் இறந்ததை ஆற்றாது, தீமூட்டி உயிர்விடத் துணிந்த அவன் தேவியைச் சான்றோர் தடுத்தபோழ்து, அவள் சான் றோரை நோக்கி, "என்னை எரியில் மூழ்கெனச் சொல்லாது செல்கென விலக்கும் நும் சிறந்த அறிவுடைமை தான் என்னே! கணவனை இழந்தும் உயிர்நீங்காது இருந்து துன்புறும் பெண்டிரைப் போன்றே னல்லேன் யான். இவ்வெரி உங்கட்கு அச்சத்தைக் கொடுக்கலாம், ஆனால், எனக்குத் தாமரை நிறைந்த குளிர்ந்த நீர்நிலை போன்றதே!" என்று கற்பின் வீரம் தோன்றக் கூறி எரி புகுந்தாள். கற்பின் ஆற்றலால் எழுந்த இவ்வீரவுரை தறுகண் பற்றியதே.

இனி கல்வி, புகழ், கொடைபற்றிய வீரத்தை ஆய்வாம்.

சிறப்புடைக் கல்வியைக் கற்றோன், பிறரிடம் குற்றம் கண்டுழி, அதைத்திருத்த அஞ்சாது முன்வரின், அவ்வஞ்சாத் தன்மையும் அது போன்றனவும் கல்வி பற்றிய வீரமெனப்படும்.

கடைச்சங்க காலத்தே சிறந்து விளங்கிய நக்கீரர், பாண்டிய அரசன் சபையில், "பெண்கள் கூந்தற்கு இயற்கையில் மணம் உண்டு

என்ற கருத்துடைச் செய்யுள் குற்றமுடைத்து" என்று அஞ்சாது கூற, அச்செய்யுளை இயற்றிய சிவனாரே அச்சபையிடை மனித உருவில் தோன்றி, இப்பாட்டுக் குற்றமுடைத்தோ ?" என்று வினவினார். அதற்கு நக்கீரர் பின் வாங்காது, "ஆம்" எனத் தலையசைத்தார். உடனே, சீற்றங்கொண்ட சிவனார் நெற்றிக்கண் காட்டினார். கடவுள் என்பதை யறிந்துங்கூட, "நெற்றிக்கண் காட்டினும் குற்றம் குற்றமே" என்றார் நக்கீரர். இப்புலவர் பெருமானிடத்துத் தோன்றிய இவ்வீரம் கல்விபற்றிய வீரமெனப்படும்.

தீயவழியில் ஒருவனுக்கு நிறைந்த செல்வம் வருவதாயின், அதை அவன் வெறுத்துத்தள்ளும் தன்மையனாயின் அவனையும் வீரனெனவே பண்டை நூலோர் கருதினர். அவன் வீரம் புகழ் பற்றியதாகும்.

> புகழெனின் உயிருங் கொடுக்குவர் பழியெனின்
> உலகுடன் பெறினுங் கொள்ளலர்........."

என்ற புறநானூற்றுச் செய்யுளிலிருந்து நந்தமிழர் புகழ்வருவதாயின் உயிரையும் இழக்கத்துணிவர், உலகமே உரிமையதாயினும் பாதகச் செயல் புரியார் என்பது வெளிப்படை.

மணிமேகலையைக் காதலித்த உதயகுமரன், விஞ்சையனால் கொல்லப்பட்டதை அறிந்த அவன் தந்தையாகிய சோழ அரசன், 'மநுநீதிச் சோழன் போன்ற சிறந்த அரசர்கள் தோன்றிய குடியில் இப்பெரும் பாதகன் தோன்றினான் என்பதை வேற்றரசர் அறியுமுன், இவனை ஈமத்தில் ஏற்றி எரித்திடவேண்டும்' என்று வருந்திக் கூறினான். இவன் கூற்று புகழ்க்குரியதே.

அரிச்சந்திரன் நாடு, பொருள், புதல்வன் முதலிய யாவற்றையும் இழந்து, மனைவியையும் இழக்கும் நிலையிலிருந்தபோது, வேதியர், 'ஒரு பொய்யுரைத்தால் இழந்த யாவும் மீண்டும் பெறலாம்' என்றார். ஆனால் அம்மன்னன்,

> பதியிழந்தனம்; பாலனையிழந்தனம்; படைத்த
> நிதியிழந்தனம்; இனி நமக்கு உளதென நினைக்குங்
> கதியிழக்கினும் கட்டுரை யிழக்கிலேம்.........'

என்று வீட்டுலகையும் இழக்க நேரினும் பொய்யுரையேம் என்ற வீரஉரையும் புகழ் பற்றியதாகும். ஒரு பொய் அவனிழந்த அத்துணைப் பொருளையும் மீண்டும் அளித்திருக்கும். ஆனால், அவன் வீரவுணர்ச்சி அதற்கு இடமளித்திலது.

சிறந்த வள்ளற்றன்மையே கொடைபற்றிய வீரமெனப்படும். வரையாது கொடுக்கும் வள்ளல் தன் உயிரையுங் வழங்கத் தயங்கான். அவர்களுள் அதியமான், குமணன், கன்னன் ஆகியோரின் கொடை வீரத்தைப்பற்றிச் சிறிது ஆராய்வோம்.

ஓரரிய நெல்லிக் கனியை முனிவரொருவர் அதியமானுக்குக் கொடுத்தார். அதையுண்டோர் நீண்டநாள் உயிரோடு வாழ்வர். ஆனால், அதியமான் அதை அருந்தவில்லை. 'ஔவைபோன்ற பெரும் புலவர் அக்கனியை யுண்டால் நீண்டநாள் உலகிலிருந்து உலக மக்கட்குப் பயன்படுவர்' என்று கருதினான். கருதி ஔவைக்குக் கொடுத்து மகிழ்ந்தான். (தொடரும்)